Lions Club of

# Erode Supreme

Official Bulletin - Nov - Dec 2022



GEM HOSPITAL

# EXCLUSIVE DEPARTMENT FOR ROBOTIC CANCER SURGERY

**100% PRECISION | MAXIMUM CURE**





To know more visit

***robotic.gemhospitals.com***

**A new era in Cancer Care**

45, Pankaja Mill Road, Ramanathapuram, Coimbatore - 641 045

# தலைவரின் அன்பு மடல்



அன்பும் நற்பண்பும் மிக்க எனது அருமை அரிமாக்கள் அனைவருக்கும் அன்பு கலந்த இனிய வணக்கம்.

இம்மண்ணில் பல்லாயிரக்கணக்கான உயிரினங்கள் வாழ்ந்தாலும் அவைகளில் மிகவும் உயரிய உன்னதமான உயிரினம் மனித இனமே. உயர்ந்த பிறவி எடுத்த நாம் நல்ல மனிதனாக வாழ வேண்டும். மனம், சொல், செயலால் நல்லவனாக இருக்க வேண்டும். மனம் ஒரு குரங்கு போன்றதே அதை தன் இஷ்டத்திற்கு விட்டால் பெரும் பாவத்தில் தள்ளிவிடும்.

கண் போன போக்கிலே,
கால் போகலாமா
கால் போன போக்கிலே..
மனம் போகலாமா!
மனம் போன போக்கிலே..
மனிதன் போகலாமா!
நல்ல மனிதர்கள் போன பாதையை
மறந்து போகலாமா..!

என்றார் ஒரு கவிஞர். புத்தர், வள்ளலார், விவேகானந்தர், காந்தி போன்ற மகான்களின் வழியைப் பின்பற்றி மனதை செம்மைப்படுத்தி சிறந்த பண்புள்ளவர்களாக வாழ வேண்டும்.

'மக்கள் சேவையே மகேசன் சேவை' -விவேகானந்தர்.

ஏழைகளும் வறியவர்களும் படும் துன்பத்தை துயரத்தை கண்டு யாருடைய உள்ளம் கசிந்து உருகுகிறதோ! அவர்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்ற எண்ணம் உடனடியாக யாருக்கு ஏற்படுகிறதோ, அவர்களே உண்மையான தேசபக்தர்கள் என்பதற்கு ஏற்ப, நமது சங்கம் கடந்த 6 மாதங்களாக உங்களுடைய மேலான ஒத்துழைப்பினால் நிகழ்முறைக்கூட்டங்கள், சேவைத் திட்டங்கள் கண் சிகிச்சை முகாம், பள்ளி மேம்பாட்டுத்திட்டம், முதியோர் இல்லத்திற்கு உணவு, குழந்தைகள் காப்பகத்திற்கு உபகரணங்கள், கண்தானங்கள், உறுப்பினர் பெருக்கம் போன்றவைகளை மிகச் சிறப்பாக செய்துள்ளோம்.

324 E அரிமா மாவட்டத்தில் தொடர்ந்து நமது சங்கம் கண்தானத்தில் முதலிடம் பெற்று வருவதற்கு உதவிய அரிமாக்கள், கண்தான குழுத்தலைவர் அரிமா E.சத்தியமூர்த்தி அவர்களுக்கும், வாழ்த்துதல் குழு மூலம் ரூ.69,205/- பெற்றுக் கொடுத்த வாழ்த்துதல் குழுத்தலைவர் அரிமா இ.தேவராஜு அவர்களின் சேவைக்கும், பிறந்தநாளை முன்னிட்டு நிதி வழங்கிய அனைத்து அரிமாக்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சாசனநாள் மற்றும் முன்னாள் தலைவர்கள் தினத்தை மிகச் சிறப்பாக நடத்திய திட்டத்தலைவர் அரிமா K.குமார் மற்றும் திட்ட துணைத் தலைவர் அரிமா K.A.நாகராஜன் அவர்களுக்கும் பாராட்டுக்கள்.

மீண்டும் ஒரு முறை அனைத்து நண்பர்களுக்கும் என் நன்றிகளை உரித்தாக்குகிறேன். இனிய புத்தாண்டு, தைத்திருநாள் நல்வாழ்த்துகள்...

என்றும்
அரிமா M.**ராமசாமி** ஆசிரியர்

# செயலாளர்கள் நன்றி மடல்

அன்பு அரிமாக்களுக்கு இனிய வணக்கம்.

மூன்றாவது சங்க இதழின் மூலம் அனைவரையும் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி.

'ஊர் கூடி தேர் இழு' என்ற பழமொழிக்கு ஏற்றார் போல் ஊரில் உள்ள மக்கள் ஒன்று கூடி முயற்சி செய்தால்தான், பெரிய தேர் வீதிகளில் பவனி வருவது போல் கடந்த 6 மாதங்களாக நமது சங்கத்தில் நடைபெற்ற நிகழ்முறைக் கூட்டங்கள் சாசனநாள் மற்றும் முன்னாள் தலைவர்கள் தினப் பாராட்டு விழா மற்றும் சேவைத் திட்டமான கண்சிகிச்சை முகாம்கள், உணவு வழங்கியது, பள்ளிக்கு CCTV கேமரா பொருத்தியது, பொருளீட்டுத் திட்டமான இனிப்பு, பட்டாசு விற்பனை, யாதுன்ஸ் குழந்தை காப்பகத்திற்கு உபகரணங்கள், ஸ்மார்ட் கிளாஸ் திறப்பு விழா, கண்தானம் போன்ற எல்லா நிகழ்வுகளும் உங்களுடைய மேலான ஒத்துழைப்பினாலும் சேவைத் திட்டத்திற்கு நிதி உதவி வழங்கியதாலும் மிகச் சிறப்பாக நடைபெற்றது.



அரிமா **N.வஜ்ரவேல்**
செயலாளர்



அரிமா **P.ரமேஷ்**
செயலாளர்

அனைவருக்கும் இனிய புத்தாண்டு, பொங்கல் திருநாள் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம். நன்றி!

| நாட்கள் | நிகழ்வுகள் |
|---|---|
| 01.11.22 | ஒன்பதாவது நிகழ்முறைக் கூட்டம் - சுப்ரீம் பட்டிமன்றம் |
| 09.11.22 | ஐந்தாவது நிகழ் இயக்குநர்கள் குழுக் கூட்டம் |
| 17.11.22 | பத்தாவது நிகழ்முறைக் கூட்டம் |
| 21.11.22 | அரிமா டிரஸ்ட் குழந்தைகளுக்கு உணவு வழங்கியது |
| 01.12.22 | சாசன நாள் மற்றும் முன்னாள் தலைவர்கள் தினம் |
| 05.12.22 | ஆறாவது இயக்குநர்கள் குழுக் கூட்டம் |
| 09.12.22 | இளம் அரிமா சங்கப் பதவியேற்பு விழா சூர்யா பொறியியல் கல்லூரி |
| 15.12.22 | பனிரெண்டாவது நிகழ்முறைக் கூட்டம் |
| 19.12.22 | NL கருணை முதியோர் இல்லத்திற்கு உணவு வழங்கியது. |

# சுப்ரீம் பட்டிமன்றம்



03.11.2022 அன்று சுப்ரீம் பட்டிமன்றம் நடைபெற்றது. குடும்பப் பாரத்தை அதிகம் சுமப்பது ஆண்களா? பெண்களா? என்ற தலைப்பில் நமது சங்கக் கூட்ட அரங்கில் நடந்தேறியது.




பட்டிமன்றத்திற்கு நடுவராக முன்னாள் பன்னாட்டு இயக்குநர் அரிமா Er.K.தனபாலன் அவர்கள் செயல்பட்டார். பட்டிமன்ற நிகழ்வு தொடங்குவதற்கு முன் அரிமாக்களிடம் தீர்ப்பு ஒட்டுச் சீட்டுகள் வழங்கப்பட்டன.




அரங்கம் நிரம்பிய அரிமாக்களும் கூட்டத்தில் ஆண்களே! என்ற அணியில் அரிமா K.கலையரசன், அரிமா P.ஆனந்தன், அரிமா G.N.சித்தார்த்தன் ஆகியோரும் பெண்களே! என்ற அணியில் அரிமா N.K.தனபாக்கியம் அரிமா ராதா மனோகரன், அரிமா E.ஜெயா ஆகியோர் தங்களுடைய குடும்ப அனுபவங்களையும், சமுதாய அனுபவங்களையும், தங்களுடைய அனல் பரந்த கருத்துகளாகவும், வாதங்களாகவும் எடுத்துரைத்தார்கள்.









இறுதியாக நடுவர் அவர்கள் பல குடும்பப் பெண்கள் தன்னுடைய வீட்டு வேலைகளையும், குடும்பப் பொருளாதார வளர்ச்சிக்கு வேலைக்குச் செல்கிறார்கள் எனக் கூறி, குடும்பப் பாரத்தை அதிகம் சுமப்பது பெண்களே! என்ற தீர்ப்பினை வழங்கினார்.




தீர்ப்பு வாக்குச் சீட்டின் மூலம் 63 அரிமாக்கள் ஆண்களே! என்றும் 60 அரிமாக்கள் பெண்களே! என்றும் 3 அரிமாக்கள் 2 பேருமே என்றும் தீர்ப்பு வழங்கினார்கள். இறுதியாக பட்டிமன்றப் பேச்சாளர்களுக்கு நினைவுப்பரிசு வழங்கப்பட்டது.



# சுகம் சுகமே



***17.11.2022*** அன்று பத்தாவது நிகழ்முறைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நமது சங்கத்தின் உறுப்பினர்களும் அறிமுகம் மாவட்ட பயிற்றுநர்கள் அரிமா K.R.அசோக், அரிமா பிருந்தா அசோக் ஆகியோர் கலந்துகொண்டு 'சுகம்' என்ற தலைப்பில் 'நீ பாதி நான் பாதி' என்ற வித்தியாசமான முறையில் அவர்களின் வாழ்க்கையில் ஏற்பட்ட அனுபவங்கள் நாம் ஆற்றிவரும் சேவையின் மூலம் கிடைக்கப்பெற்ற சுகங்களைப் பற்றி தங்களுடைய பயிற்சியினால் அரிமாக்கள் அரிமாட்டிகள் அனைவரையும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தினார்கள்.




நமது அரிமா மாவட்டம் சார்பாக நவம்பர் மாதம் 7, 8, 9 ஆகிய தேதிகளில் கோவை ஆனைக்கட்டியில் பேச்சுக்கலைப் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியில் நமது சங்க உறுப்பினர் அரிமா P.கதிர்வேலவன் கலந்து கொண்டு தன் அனுபவங்களை எடுத்துரைத்தார்.



தொடர்ந்து எட்டு நிகழ்முறைக் கூட்டங்களில் கலந்து கொண்ட 19 அரிமாக்கள் நினைவுப்பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள்.



இம்மாதத்தில் கண்தானம் பெற உதவிய 6 அரிமாக்களை சிறப்பு விருந்தினர் கௌரவித்தார்.

வருகைப் பதிவு குலுக்கல் முறையில் அரிமா பிருந்தா அசோக் மற்றும் அரிமா J.மூர்த்திலிங்கம் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டு நினைவுப்பரிசு வழங்கப்பட்டது.



இனிதே மகிழ்ச்சியுடன் கூட்டம் நிறைவு பெற்றது.

# செம்மொழி நாயகன்

15.12.2022 அன்று பனிரெண்டாவது நிகழ்முறைக் கூட்ட சிறப்பு விருந்தினர் திரு. இரா.யுவராஜ் அவர்களை அரிமா இ.தேவராஜு அவர்கள் அறிமுகம் செய்தார். ஈரோடு கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் இரா.யுவராஜ் அவர்கள் “தமிழும் தமிழர் வாழ்வும்” என்ற தலைப்பில் பக்திப் பாடலுடன் தமிழர்களின் உறுதிப்பொருளான அறம், பொருள், இன்பம், வீடு அடிப்படையில் செந்தமிழ் மொழியில் சொற்பொழிவு ஆற்றினார்.

அறம் - நன்மை செய்

பொருள் - நீதி அடிப்படையில் பொருள் ஈட்டல்

இன்பம் - சிற்றின்பம் பேரின்பம்

வீடு - பிறவியிலிருந்து விடுதலை அடைதல் கருத்துகளை நம்முடைய அரிமாக்களின் மனதில் விதைத்தார்.

கண்தான குழுத்தலைவர் அரிமா E.சத்தியமூர்த்தி அவர்கள் இதுவரையில் 26 ஜோடி கண்தானங்கள் பெற்றுள்ளோம். நமது இலக்கான 50 ஜோடியை அடைய அனைவரும் முயற்சி செய்யுமாறு கேட்டுக் கொண்டார்.

மண்டலத் தலைவர் அரிமா P.K.சரவணன் 05.03.2023 அன்று மண்டலச் சந்திப்பு நடைபெறுகிறது. நாம் அனைவரும் ஒன்றிணைவோம் வாருங்கள் என்றார்.

வருகைப் பதிவு குலுக்கல் முறையில் அரிமா A.பாலுசாமி மற்றும் அரிமாட்டி டாக்டர் சித்ரா சௌந்தரராஜன் தேர்ந்தெடுக்கப்பட்டு நினைவுப்பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.














# அன்பு நிலைப்பெற...
# ஆசை நிறைவேற... இன்பம் நிறைந்திட...

## நவம்பர்

| | | |
|---|---|---|
| அரிமா J.சிவகுமார் | - | 500 |
| அரிமா M.ராமசாமி | - | 500 |
| அரிமா S.தனம்யோகானந்த் | - | 500 |
| அரிமா P.நாச்சிமுத்து | - | 500 |
| அரிமா A.சரவணன் | - | 1000 |
| அரிமா Dr.R.S.நவீன்பாலாஜி | - | 500 |
| அரிமா M.கார்த்திக் | - | 500 |
| அரிமா S.B.பிரசன்னாகுமார் | - | 500 |
| அரிமா K.C.தங்கமுத்து | - | 1000 |
| அரிமா R.வேலுசாமி | - | 500 |
| அரிமா A.சுந்தரம் | - | 500 |
| அரிமா P.கதிர்வேலவன் | - | 500 |
| அரிமா P.பூபதி | - | 500 |

## டிசம்பர்

| | | |
|---|---|---|
| அரிமா D.ஆர்த்தி | - | 500 |
| அரிமா R.யாசினி | - | 500 |
| அரிமா A.மயில்வேல் | - | 500 |
| அரிமா K.சுகுமார் | - | 1000 |
| அரிமா M.மாயக்கிருஷ்ணன் | - | 500 |
| அரிமா M.சரண்யா | - | 500 |
| அரிமா P.புகழேந்தி | - | 500 |
| அரிமா P.நாகராஜன் | - | 600 |
| அரிமா K.ஜோதிராமலிங்கம் | - | 500 |
| அரிமா P.தினேஷ்குமார் | - | 500 |
| அரிமா S.சிவலட்சுமி | - | 500 |
| அரிமா S.வித்யா | - | 500 |
| அரிமா K.K.சுரேஷ்குமார் | - | 500 |
| அரிமா S.பாலகிருஷ்ணன் | - | 1000 |
| அரிமா K.கலையரசன் | - | 500 |
| அரிமா P.குணசேகரன் | - | 500 |
| அரிமா P.மாணிக்கம் | - | 500 |
| அரிமா K.தங்கவேல் | - | 10,000 |
| அரிமா K.கலைச்செல்வன் | - | 1000 |
| அரிமா Su.மஞ்சுஸ்ரீ | - | 500 |

**நன்கொடை வழங்கிய அரிமாக்களுக்கு நன்றி...**



'ஆசிரியர் பணியே அறப்பணி' அதற்கு உன்னை அர்ப்பணி என்று கூறிய முன்னாள் குடியரசுத் தலைவர் சர்வப்பள்ளி டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்களின் பொன் வரிகளுக்கு ஏற்ப நமது வாழ்த்துதல் குழுத்தலைவர் அரிமா இ.தேவராஜு அவர்கள் தன்னுடைய ஆசிரியர் பணிகளுக்கு இடையே அரிமாக்களுக்கு பிறந்தநாள் அன்று நேரில் வாழ்த்துகளைக் கூறி நினைவுப்பரிசு வழங்கி வருகிறார்.

இதுவரையில் அரிமாக்கள் சேவைத்திட்டங்களுக்கு ரூ.69,205/- வழங்கியுள்ளார்கள். இவருடைய சேவை மென்மேலும் தொடர இதழின் மூலம் நல்வாழ்த்துகள்.

## "நீண்ட நீண்ட காலம் நீர் நீடு வாழ வேண்டும்
## வானம் தீண்டும் தூரம் நீர் வளர்ந்து வாழ வேண்டும்..."

**இனிய பிறந்தநாள் வாழ்த்துகள்...!**

### ஜனவரி

| | |
|---|---|
| 01 | அரிமா K.ஆறுமுகம் |
| 06 | அரிமா N.நல்லசாமி |
| 07 | அரிமா D.அர்ஜுனன் |
| 08 | அரிமா தேன்மொழி தியாகராஜன் |
| 09 | அரிமா P.சந்திரசேகர் |
| 09 | அரிமா S.ஞானசேகரன் |
| 11 | அரிமா M.கமலநாதன் |
| 13 | அரிமா T.ரவிச்சந்திரன் |
| 15 | அரிமா E.L.கிரி |
| 15 | அரிமா G.ஆனந்த் |
| 15 | அரிமா N.மலர் |
| 17 | அரிமா C.பாஸ்கரன் |
| 18 | அரிமா டாக்டர் S.P.சுகுமார் |
| 19 | அரிமா V.அனுசுயா |
| 24 | அரிமா சந்திரகலா குமாரசாமி |
| 29 | அரிமா M.விஸ்வநாதன் |
| 31 | அரிமா M.ரமேஷ் குமார் |

### பிப்ரவரி

| | |
|---|---|
| 01 | அரிமா D.ரவிச்சந்திரன் |
| 02 | அரிமா பத்மினி மயில்வேல் |
| 03 | அரிமா A.ஹேமாப்ரீத்தி |
| 04 | அரிமா S.மூர்த்தி |
| 08 | அரிமா A.தனலட்சுமி |
| 08 | அரிமா R.விஜயா ரவிச்சந்திரன் |
| 09 | அரிமா ராதா மனோகரன் |
| 10 | அரிமா S.சரவணன் |
| 10 | அரிமா S.அசோக் குமார் |
| 12 | அரிமா S.சுகாசினி |
| 13 | அரிமா K.ரவிச்சந்திரன் |
| 13 | அரிமா V.M.கந்தசாமி |
| 17 | அரிமா P.ஆனந்தன் |
| 18 | அரிமா V.சுகுமாரன் |
| 19 | அரிமா D.சிவலிங்கம் |
| 21 | அரிமா K.குமாரராஜா |
| 21 | அரிமா Dr.S.பிரதீபா சுதாகர் |
| 21 | அரிமா P.சரவணன் மூர்த்தி |
| 22 | அரிமா D.நவநீதகிருஷ்ணன் |
| 22 | அரிமா V.M.வேல்முருகன் |
| 24 | அரிமா S.விஜயலட்சுமி |
| 25 | அரிமா S.ராஜரத்தினம் |

## சுப்ரீமின் விழுதுகள் (308)


நமது சங்கம் கடந்த 31 ஆண்டுகளாக உறுப்பினர் பெருக்கத்தில்
நிகர இலாபம் அடைந்து வருகிறது.
உங்கள் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.



**அரிமா கிங் பாலா**
இணைத்தவர்
அரிமா V. சுகுமாரன்




**அரிமா V. தீபன்**
இணைத்தவர்
அரிமா M.ராமசாமி



**அரிமா S. சௌந்தரராஜன்**
இணைத்தவர்
அரிமா V. கோவிந்தராஜ்



**அரிமா S. ஜீவானந்தம்**
இணைத்தவர்
அரிமா K. கலையரசன்



# விழிகளுக்கு மரணம் இல்லை

| தேதி | விழி கொடுத்தவர்கள் | விழிபெற உதவியவர்கள் |
|---|---|---|
| 05.11.2022 | திரு. G.ஆறுமுகம் | அரிமா G.ரங்கசாமி |
| 08.11.2022 | திரு. ஜெயக்குமார் | அரிமா E.சத்யமூர்த்தி |
| 08.11.2022 | திரு. T.விஜயகுமார் | அரிமா E.சத்தியமூர்த்தி |
| 16.11.2022 | திரு. C. மணி | அரிமா E.சத்தியமூர்த்தி |
| 16.11.2022 | திரு. B.ஈஸ்வரமூர்த்தி | அரிமா E.சத்தியமூர்த்தி |
| 01.12.2022 | திரு. R.பெருமாள் | அரிமா S.M.சரவணன் |
| 05.12.2022 | திருமதி. K.குழந்தை அம்மாள் | அரிமா A.பாலுசாமி |
| 16.12.2022 | திருமதி. அருக்காணி அம்மாள் | அரிமா S.கணேசன் |
| 19.12.2022 | திருமதி. S.இந்திரா | அரிமா K. தமிழ்ச்செல்வன் |
| 21.12.2022 | திரு. K.அர்த்தநாரி கவுண்டர் | அரிமா M. கார்த்திக் |

அரிமா 324E மாவட்டத்தில் நமது சங்கம் தொடர்ந்து கண்தானத்தில் முதலிடம் பெற்று வருகிறது. இதற்கு உதவிய அரிமாக்கள், கண்தான குழுத்தலைவர், அரிமா E.சத்தியமூர்த்தி ஆகியோர்களுக்கு இதழின் மூலம் நன்றிகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

**முதல் பரிசு**
ரூ. 12,000/-

**இரண்டாவது பரிசு**
ரூ. 6,000/-

**மூன்றாவது பரிசு**
ரூ. 3,000/-

| | | |
|---|---|---|
| முதல் இடம் | அரிமா E.சத்தியமூர்த்தி | 15 |
| இரண்டாம் இடம் | அரிமா M.கார்த்திக் | 3 |
| மூன்றாம் இடம் | அரிமா M.தனசேகரன் | 2 |
| | அரிமா N.முருகேசன் | 2 |
| | அரிமா S.M.சரவணன் | 2 |

*கண்தான இலக்கு 50 - இதுவரையில் 28 ஜோடிகள்*

**கண்தானம் பெற முயற்சி செய்வோம்...**
**இலக்கினை அடைவோம்...!**

# அன்னமிட்ட கை



இரண்டாம் உதவி தலைவர் அரிமா S.அசோக்குமார் அவர்களின் மகன்-மகள் பிறந்த நாளான 21.11.2022 அன்று அரிமா டிரஸ்ட் குழந்தைகளுக்கு இரவு உணவு வழங்கினார்.





இந்நிகழ்வில் உடனடி முன்னாள் தலைவர் அரிமா K.C.தங்கமுத்து முதலாம் உதவித் தலைவர் அரிமா R.பாலசுப்பிரமணியம் இயக்குநர்கள் அரிமா P.குணசேகரன் அரிமா E.சத்தியமூர்த்தி அரிமா S.கார்த்திகேயன் அரிமா V.ரவி அரிமா M.மனோகரன் உறுப்பினர்கள் அரிமா இ.தேவராஜு, அரிமா D.தினேஷ் மற்றும் சங்க பொறுப்பாளர்கள் கலந்து கொண்டு சேவையாற்றினார்கள்.



முன்னாள் தலைவர் அரிமா M.விஸ்வநாதன் அவர்களின் தந்தையார் திரு.மாணிக்கம் அவர்களின் நினைவு தினமான 19.12.2022 அன்று N.L.கருணை முதியோர் இல்லத்திற்கு மதிய உணவு வழங்கப்பட்டது. உடனடி முன்னாள் தலைவர் அரிமா K.C.தங்கமுத்து மற்றும் சங்கப் பொறுப்பாளர்கள் கலந்து கொண்டு சேவையாற்றினார்கள்.



சுப்ரீமின் அகராதியில் ''உச்சம்'' என்பதற்கு ஏற்றார் போல் உலகளாவிய அளவில் சுப்ரீம் வளர்வதற்கு முன்னாள் தலைவர்களின் அர்ப்பணிப்பும், சேவையும், சங்க வளர்ச்சியின் உந்து சக்தியாகும்.

01.12.2022 அன்று சுப்ரீமின் ஆலமரமான முன்னாள் தலைவர்கள் மற்றும் சாசன நாள் பாராட்டு விழாவாகக் கொண்டாடப்பட்டது. 28 விழுதுகளுடன் தொடங்கிய நமது சங்கம் தற்போது 308 விழுதுகளாக வளர்ச்சி பெற்றுள்ளது.

சிறப்பு விருந்தினர் முன்னாள் மாவட்ட ஆளுநர் அரிமா K.பிருத்வி குமார் அவர்கள் நமது அரிமா சங்கத்தில் 40 வயதிற்கு மேற்பட்ட உறுப்பினர்கள் உள்ளடக்கிய நூறு ஆண்டுகளைக் கடந்துள்ளோம். இன்னும் நூறு ஆண்டுகளைக் கடக்க இளைஞர்களை அதிக அளவில் அரிமா பேரியக்கத்தில் இணைக்க வேண்டும் என்று உரையாற்றினார்.

மேலும் நமது கூட்டு மாவட்டம் மிகச் சிறப்பாக செயல்படுவதற்கு முன்னாள் பன்னாட்டு இயக்குநர் அவர்களின் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலுக்கு பாராட்டினார்.

சுப்ரீமின் தாரக மந்திரமான சங்கத்தின் நேர மேலாண்மை பற்றி கூட்டு மாவட்ட அளவில் தான் பேசி வருவதாகவும், சுப்ரீமின் Ambassador - ராக செயலாற்றுவதாக பெருமிதம் கொண்டார். சிறப்பு விருந்தினரை அறிமுகம் செய்த அரிமா தனபாக்கியம் அவர்களுக்கு நன்றி தெரிவித்தார்.

5, 10, 15, 20, 25, 30 ஆண்டுகளாக சேவையாற்றிய உறுப்பினர்கள் மற்றும் MJF விருதினைப் பெற்றவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.



விழாவின் நாயகர்களின் சார்பாக முன்னாள் தலைவர்கள் அரிமா V.சிவக்குமார், அரிமா K.தமிழ்ச்செல்வன், அரிமா K.கலையரசன், அரிமா K.கலைச்செல்வி, பட்டயத்தலைவர், மண்டல தலைவர், வட்டாரத் தலைவர், முன்னாள் மாவட்ட ஆளுநர், முன்னாள் பன்னாட்டு இயக்குநர் ஆகியோர் சுப்ரீமின் 31 வருட பயணத்தின் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டு மிகச் சிறப்பாக பாராட்டியதற்கு அனைத்து உறுப்பினர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்தார்கள்.

அனைவரும் போற்றும் விதமாக அழைப்பிதழை வடிவமைத்த மூன்றாம் உதவி தலைவர் அரிமா M.ரமேஷ்குமார் அவர்களுக்கும், சிறப்பு விருந்தினருக்கும், முன்னாள் தலைவர்களுக்கும் தொடர்ந்து சேவையாற்றிய 5 முதல் 30 ஆண்டுகள் தொடர்ந்து சேவையாற்றிய அரிமாக்களுக்கு நினைவுப் பரிசை தேர்வு செய்த அரிமா சசிகலா தனபாலன், அரிமா சிவலட்சுமி சரவணன் ஆகியோருக்கும் திட்டத் தலைவர் அரிமா K.குமார், திட்ட துணைத் தலைவர், அரிமா K.A.நாகராஜன் ஆகியோருக்கும் பாராட்டு விழாவை மிகச் சிறப்பாக ஏற்பாடுகளை செய்தமைக்கு இதழின் மூலம் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.












# பன்னாட்டு கூட்டு மாவட்டச் செய்திகள்

முதல் துணை மாவட்ட
ஆளுநர்களுக்கான
பயிற்சி வகுப்பு
பிப்ரவரி மாதம்
சிகாகோவில்
நடைபெறவுள்ளது.

50வது இசாமி (ISAME)
மாநாடு
விசாகப்பட்டினத்தில்
டிசம்பர் 16-19
வரை நடைபெற்றது.
கூட்டு மாவட்டம்
316 ஏற்று நடத்தியது.

இரண்டாவது கூட்டு
மாவட்டக் கூட்டம்
நவம்பர் 24, 25 தேதிகளில்
கோவையில் நடைபெற்றது.
அதில் வரும் மே மாதம்
தேதிகளில் கூட்டு மாவட்ட
மாநாடு சென்னையில்
நடைபெறுவதற்கும்,
பன்னாட்டு இயக்குநர்
ஒப்பிசைவிற்கான தேர்தல்
நடத்தவும், அதற்கான
பதிவுத்தொகை 3000+GST
என்றும் முடிவு
செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்கா விசா
வாங்குவது மிகச் சிரமமாக
இருப்பதை முன்னிட்டு
நமது இசாமி (ISAME)
அலுவலகம் முயற்சி
எடுத்ததன் விளைவாக
வரும் மாதத்தில்
இருந்து 10 பேர்களுக்கு
Appointment தர
இந்திய தூதரகம்
ஒப்புதல்
அளித்துள்ளது.

நவம்பர் மாதம்
16, 17, 18 ஆகிய
தேதிகளில் ஊட்டியில்
Elik Hill Sterling RLLI
(Regional Lions Leadership
Institute) பயிற்சி வகுப்பு
நமது கூட்டு
மாவட்டம் நடத்தியது.
டிசம்பர் மாதம் 6, 7, 8,
9 ஆகிய தேதிகளில்
ஏற்காடு Sterling Resort
இல் ALLI பயிற்சி
நடைபெற்றது. நமது
மாவட்டம் சார்பாக
2 அரிமாக்கள் கலந்து
கொண்டார்கள்.

2024 ஏரியா
மாநாட்டை நடத்த
320 கூட்டு
மாவட்டத்திற்கு
ஒப்புதல் தரப்பட்டது.
இம் மாநாடு
ஹைதராபாத்தில்
நடைபெறவுள்ளது.

அடுத்த 2023
ஏரியா மாநாடு
பங்களாதேஷ்
நாட்டின்
டாக்காவில்
நடைபெறவுள்ளது.

Campaign 100
திட்டம் 2018
ஆகஸ்ட் மாதம்
தொடங்கியது.
இலக்கு
மூன்றாண்டுக்குள்
300 மில்லியன்
டாலர் திரட்டுவது.

கோவிட் காரணமாக
ஓராண்டு நீட்டிக்கப்பட்ட
காரணத்தால்
4 ஆண்டில் 330
மில்லியன் டாலர்
கிட்டத்தட்ட இன்றைய
நமது மதிப்பில்
2637 கோடி நிதி
திரட்டப்பட்டுள்ளது.

துணை மாவட்ட
ஆளுநர்களுக்கான
பயிற்சி ஜனவரி
5, 6, 7 - 2023
மாமல்லபுரத்தில்
நடைபெறவுள்ளது.

Multiple Council Meeting
நவம்பர் மாதம்
16, 17, 18 ஆகிய
தேதிகளில் கோவை
கோகுலம் பார்க்
ஹோட்டலில்
நடைபெற்றது.

# மாவட்டச் செய்திகள்

நவம்பர் 12, 13 ஆகிய தேதிகளில் ஊத்தங்கரை அதியமான் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, டிசம்பர் 29, 30 ஆகிய தேதியில் ஆத்தூர் SRM முத்தமிழ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில், Lions Quest நடைபெற்றது.

நவம்பர் 19, 20, 21 ஆகிய தேதிகளில் சேலம் சிவராஜ்-இன் ஹோட்டலில் Business Excellency Training Avenue (BETA) பயிற்சியில் 57 அரிமாக்களும் நமது சங்கத்தின் சார்பாக அரிமா P.கதிர்வேலவன், அரிமா S.சரவணன் அரிமா S.பிரபு ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

324E அரிமா மாவட்ட உலக அமைதி ஓவியப் போட்டி 5 வருவாய் அரிமா மாவட்ட சங்கங்கள் இணைந்து மிகச் சிறப்பாக நடத்தினார்கள். 226 பள்ளிகளிலிருந்து 4807 மாணாக்கர் ஓவியங்களை வரைந்தார்கள்.

நமது அரிமா மாவட்டம் 324E கூட்டு மாவட்ட அளவில் இரண்டாம் இடத்திற்கான விருதினைப் பெற்றுள்ளது.

‘வசந்தம் மலரட்டும்’ ஆண்டின் மாவட்ட ஆளுநர் வருகை விழாவினை 65 அரிமா சங்கங்கள் நடத்தியுள்ளன.

மாவட்ட கிரிக்கெட் போட்டி டிசம்பர் 9,10,11 ஆகிய தேதிகளில் சேலம் SRP இண்டர்நேஷனல் மைதானத்தில் நடைபெற்றது.

வாழப்பாடி அரிமா சங்கம் முருகேசன் பாலிடெக்னிக் கல்லூரி (கேம்பஸ்) என்ற புதிய அரிமா சங்கம் தோற்றுவிக்கப்பட்டது.

நமது மாவட்டம் உறுப்பினர் பெருக்கத்தில் Positive Growth 300 மிகை வளர்ச்சியைப் பெற்றுள்ளது (Positive Growth).

வசந்தம் மலரட்டும் ஆண்டில் 5 மண்டலச் சந்திப்புகள் நடைபெற்றுள்ளது.

# நீத்தார் நினைவு அஞ்சலி



அரிமா P.சாந்தி



அரிமா A.S.விமலநாதன்

இரண்டு குடும்பங்களுக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்...

# இளைஞர்களின் சக்தி

*09.12.22* அன்று இளம் அரிமா சங்கப் பதவியேற்பு விழா சூர்யா பொறியியல் கல்லூரியில் மிகச்சிறப்பாக நடைபெற்றது.

இளம் அரிமா சங்கப் புதிய பொறுப்பாளர்களை முன்னாள் மாவட்ட ஆளுநர் பெருந்தகை அரிமா V.விஜயகுமார் அவர்கள் பதவியில் அமர்த்தி இளைஞர்கள் நாட்டின் கண்கள் என்று அனைவரையும் வாழ்த்தினார். புதிய இளம் அரிமா சங்கத்தலைவர், லியோ R.ஜனார்த்தன், உங்களுடைய கூட்டு முயற்சியினால் நல்ல சேவைத் திட்டங்களையும் விழிப்புணர்வுகளையும் செயலாற்ற உறுதிமொழி அளித்தார்.

இளம் அரிமா சங்கப் புதிய உறுப்பினர்களை மண்டலத் தலைவர் அரிமா P.K.சரவணன் அவர்கள் சங்கத்தில் இணைத்து வைத்து அனைவரையும் வாழ்த்தினார். கல்லூரி முதல்வர் டாக்டர் S.மனோகரன், லியோ சங்க மாவட்டத் தலைவர் அரிமா S.பழனியாண்டி, சுப்ரீம் தலைவர் அரிமா M.ராமசாமி ஆகியோர் அனைத்து இளைஞர் சக்திகளை வாழ்த்தி சிறப்பித்தார்கள்.

பதியேற்பு விழாவில் பட்டயத் தலைவர் அரிமா K.குமாரசாமி, முன்னாள் தலைவர் அரிமா S.பாலகிருஷ்ணன், சங்கப் பொறுப்பாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். பதவியேற்பு விழாவினை மிகச் சிறப்பாக ஏற்பாடுகளை செய்த திட்டத் தலைவர் அரிமா S.பிரபு அவர்களுக்கு இதழின் மூலம் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.












# உலக அமைதி ஓவியப் போட்டி

*நெஞ்சம் திறந்து அன்பை விதைப்போம்!!* *வஞ்சம் மறந்து நட்பை வளர்ப்போம்...!*

ஈரோடு வருவாய் அரிமா சங்கங்கள் இணைந்து *11.11.2022* அன்று BVB பள்ளியில் நடைபெற்ற உலக அமைதி ஓவியப் போட்டியில் *1860* மாணவ மாணவியர்கள் கலந்து கொண்டு ஓவியம் வரைந்தார்கள்.

சிறப்பு விருந்தினர்களாக தமிழ்நாடு வீட்டு வசதித்துறை அமைச்சர் மாண்புமிகு திரு.சு.முத்துசாமி அவர்களும், முன்னாள் பன்னாட்டு இயக்குநர் அரிமா K.தனபாலன் அவர்களும், மாவட்ட ஆளுநர் அரிமா K.R.முத்தையா அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். நமது சங்கத்தின் சார்பாக காசிபாளையம் மாநகராட்சி அரசு மேல்நிலைப்பள்ளி சார்பாக *4* மாணவர்கள், கணபதிபாளையம் அரசு மேல்நிலைப்பள்ளி சார்பாக *22* மாணவர்கள் கலந்து கொள்வதற்கு உதவிய காசிபாளையம் தலைமையாசிரியர் மற்றும் வட்டாரத் தலைவர் அரிமா P.ஆனந்தன் ஆகியோருக்கு நன்றிகள்...

நமது *324* E மாவட்டத்தின் சார்பில் *5* இடங்களில் நடைபெற்ற உலக அமைதி ஓவியப் போட்டியை மிகச்சிறப்பாக நடைபெற ஏற்பாடுகளைச் செய்த மாவட்ட ஒருங்கிணைப்பாளர்களுக்கு இதழின் மூலம் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.



**1st Prize - S.Kavin**
VIII B G.H.S.School, Maniyanoor, Salem



**2nd Prize - M.Jothi Varshini,**
VIII-B Sengunthar Vidhyalaya Matric. School, Erode



**3rd Prize - V. Vaishnavi Shree,**
VI-F B.V.B. Thindal, Erode



# தொண்டும் தோழமையும்

தொண்டும் தோழமையும் வளர்க்க வட்டார ஆலோசனை மற்றும் கூட்டுக் கூட்டம் **10.12.2022** அன்று காஞ்சிகோவில் அரிமா திருமண மண்டபத்தில் நடைபெற்றது. வட்டாரத் தலைவர் அரிமா P.ஆனந்தன் அவர்கள் கூட்டத்திற்கு வருகை புரிந்த அனைவரையும் வரவேற்று மகிழ்ந்தார்.




சங்கங்களின் செயல் திட்டங்களை வகுத்திட்டனர் செயலாளர்கள். வருங்கால சேவைகளை தலைவர் அவர்கள் முன்மொழிந்தார். சிறப்பு விருந்தினர் முன்னாள் பன்னாட்டு இயக்குநர் அரிமா K.தனபாலன் அவர்கள் கௌரவ விருந்தினர் முன்னாள் மாவட்ட ஆளுநர் அரிமா D.ரவிச்சந்திரன் அவர்கள் சங்கப் பொறுப்பாளர்களை பாராட்டி சிறப்பித்தார்கள்.



முதலாம் துணை மாவட்ட ஆளுநர் அரிமா T.R.தமிழ்மணி, மாவட்ட கண்ணொளித் திட்டத் தலைவர் அரிமா S.விஸ்வநாதன் சங்கப் பொறுப்பாளர்களை வாழ்த்தி சிறப்பித்தார்கள். மண்டலத் தலைவர் P.K.சரவணன் அவர்கள் 'நாம்' மண்டலச் சந்திப்பை வெற்றி அடையக் கூறினார்.

# பார்த்தேன்.... ரசித்தேன்......

ஆப்ரிக்கா காங்கோ நாட்டின் முன்னாள் பன்னாட்டு இயக்குநர் அரிமா அலெக்ஸ் வின்செண்ட் கோமெஷ் அவர்கள் நமது சுப்ரீம் அரிமா இரத்த வங்கியைப் பார்வையிட்டு முன்னாள் பன்னாட்டு இயக்குநர் மாவட்ட ஆளுநர், இரண்டாம் துணை மாவட்ட ஆளுநர், முன்னாள் மாவட்ட ஆளுநர்கள், அமைச்சரவைப் பொறுப்பாளர்கள், பட்டயத் தலைவர், முன்னாள் தலைவர் மற்றும் நம் சங்கப் பொறுப்பாளர்கள் ஆகியோரிடம் அவருடைய அரிமாப் பணியை எடுத்துரைத்து கலந்துரையாடினார்.






அரிமாப் பணிகளுக்காக காங்கோ நாட்டிற்குச் சென்ற முன்னாள் பன்னாட்டு இயக்குநர் அரிமா K.தனபாலன் மற்றும் அரிமா சசிகலா தனபாலன் ஆகியோரை அவர் பாராட்டினார்.

# பயமா... எனக்கா....!

– ஒரு தன்னம்பிக்கை கதை

ஐரோப்பிய வரலாற்றில் மிகவும் முக்கியமான ஒருவராகக் கருதப்பட்டவர் நெப்போலியன். தான் வாழ்ந்த காலத்தில் ஏராளமான வெற்றிகளை தன் நாட்டிற்கு தேடித் தந்தவர். தனது வலிமையாலும் புத்திசாலித்தனத்தாலும் ஐரோப்பிய கண்டத்தையே ஆட்டிப் படைத்தவர். எதற்கும் துணிந்தவர். ‘அஞ்சாநெஞ்சன்‘ என்று போற்றப்படும் இவர், ’விளையும் பயிர் முளையிலேயே தெரியும்’ என்பது போல இளம் வயதிலேயே பயம் அறியாதவராய் இருந்தார். அதற்குச் சான்றாகக் கீழ்வரும் சம்பவத்தினை நாம் எடுத்துக் கொள்ளலாம்.



நெப்போலியன் பிரெஞ்சு மாகாணத்தின் பிரபலமான பள்ளி ஒன்றில் படித்துக்கொண்டிருந்தார். போதுமான அளவு கல்வியறிவு எட்டவில்லை என்றாலும் ஒழுக்கத்தில் சிறந்தவனாக இருந்து வந்தான். அப்படி இருக்கையில் ஒரு நாள் அவனருகில் இருப்பவனின் பொருள் ஒன்று காணாமல் போய்விட்டது. அதை நெப்போலியனைத் தவிர வேறு யாரும் எடுத்திருக்க முடியாது என்று யூகித்த அந்த மாணவன், உடனடியாக ஆசிரியரிடம் நெப்போலியன் திருடியதாகக் கூறினான்.

இதைக்கேட்டு ஆத்திரம் அடைந்த அந்த ஆசிரியர், நெப்போலியனை தனி அறைக்கு அழைத்துச் சென்று, பிரம்பால் எவ்வளவு அடிக்க முடியுமோ அந்த அளவுக்கு அவனை அடித்து விட்டார். நெப்போலியன், ஆசிரியர் அடித்த அடிகளை தாங்கிக் கொண்டு அமைதியாக வெளியே வந்தான். அடுத்த நாளில் அந்த மாணவனின் பொருள் அவனுக்கு கிடைத்துவிட, நெப்போலியன் திருடவில்லை என்பதை அந்த ஆசிரியரிடம் வந்து அந்த மாணவன் கூறினார்.

உடனே அந்த ஆசிரியர் நெப்போலியனை அழைத்து, நீ திருடவில்லை என்பதை நான் அடிக்கும் போது என்னிடம் கூறியிருக்கலாம் அல்லவா..? தேவையில்லாமல் அடிவாங்கி இருக்க மாட்டாய்.. என்று சற்று வருத்தத்தோடு கூறினார்.

அதற்கு நெப்போலியன், ‘நீங்கள் அடிப்பதற்கு முன்னரே என்னிடம் அதைப் பற்றி கேட்டிருந்தால், நான் எடுக்கவில்லை என்று கூறியிருப்பேன். ஆனால் நீங்கள் அடிக்கும் பொழுது கேட்டதால் நான் ஒன்றும் சொல்லவில்லை. ஒருவேளை நீங்கள் அடிக்கும் பொழுது நான் திருடவில்லை என்று கூறியிருந்தால் நான் பயந்துபோய் பொய் சொல்கிறேன் என்று நினைத்திருப்பீர்கள். நான் பயந்து விட்டேன் என்று கூட யாரும் நினைக்கக் கூடாது. அதுதான் எனக்கு வலிக்குமே தவிர, நீங்கள் அடிப்பது ஒன்றும் எனக்கு வலிக்காது‘ என்று பட்டென்று கூறினான் நெப்போலியன். இந்த அஞ்சாத குணம் தான் அவனை ஐரோப்பியாவினை ஆள வைத்தது.

# வெற்றி தரும் செயலாக்கம்

செயலாக்கம்!

ஒரு பிசினஸில் சரியான உத்திகளை நாம் யோசித்து வைத்திருக்கிறோம்; அந்த உத்திகளை நிறைவேற்றுகிற மாதிரி, நம் நிறுவனத்தின் கட்டமைப்பையும் உருவாக்கி வைத்திருக்கிறோம். தவிர, உத்திகள் எதுவானாலும் அதை சரியாக நிறைவேற்றுவதற்கு ஊழியர்களும் இருக்கிறார்கள். இன்னும் என்ன வேண்டும் பிசினஸில் ஜெயிக்க என்று நீங்கள் கேட்கலாம்.

மேற்சொன்ன மூன்று அம்சங்கள் இருந்தாலும், முக்கியமான இன்னொரு அம்சமும் உண்டு. அது மட்டும் இல்லை என்றால், ஒரு பிசினஸ் பெரிய அளவில் வளராது; அல்லது சிறிய அளவிலேயே மறைந்துவிட வாய்ப்புண்டு.

செயலாக்கம்!

ஒரு பிசினஸ் செய்வதற்கு ஐடியா தானே முக்கியம். சரியான ஐடியா இருந்தால், பிசினஸில் ஜெயிக்க முடியாதா என்று கேட்கலாம். உண்மை தான்! ஆனால், இன்றைக்கு தொழில் ஐடியா என்பது ஒரு பண்டமாகிவிட்டது. பைசா காசு செலவில்லாமல் தாராளமாகக் கிடைக்கும் பொருளாக மாறிவிட்டது. போகிற போக்கில் நண்பர்கள் 4 ஐடியாக்களை சொல்லிவிட்டுப் போகிறார்கள். இன்டர்நெட்டைத் துழாவினால் எக்கச்சக்க ஐடியாக்கள் வந்து கொட்டுகின்றன. அட அந்த ஐடியா நன்றாக இருக்கிறதே, இந்த ஐடியா நன்றாக இருக்கிறதே! என்று நாம் ஐடியாக்களின் அலைக்கழிப்பில் மாட்டிக் கொண்டால், நம்மால் எந்தவொரு தொழிலையும் ஆரம்பித்து ஜெயிக்க முடியாது. நமக்கான ஐடியாவை கண்டுபிடித்து, அதை செயல்படுத்துவதன் மூலமே ஜெயிக்க முடியும். சரியாக ஐடியா என்பது ஒரு ஆரம்பப்புள்ளி, மற்றவர்களிடமிருந்து உங்களைப் பிரித்துக் காட்டும் ஒரு முக்கியமான வித்தியாசம் ஐடியா, அந்த ஐடியாவை செயல்படுத்துவதில் தான் நம் அறிவு. அனுபவமாக மாறி, வெற்றி என்கிற இலக்குக்கு நம்மை கொண்டுபோய் சேர்க்கும்.

பல சமயங்களில் நமக்கு தொழில் ஐடியாக்கள் பல வந்திருக்கும். பிறகு அவற்றை நாம் சுத்தமாக மறந்து போயிருப்போம். பிற்பாடு ஏதோவொரு சமயத்தில் எங்கோ ஒரு தொழிலை பார்க்கும் போது, அட நாம் இந்த ஐடியாவை நினைத்தோமே. இவர் அந்த ஐடியாவை அப்படியே செயல்படுத்தி இருக்கிறாரே என்று ஆச்சரியப்படுவோம்.

சிலர் இதைச் சொல்லும்போது எனக்கு சந்திரபாபுவின் பாட்டுதான் ஞாபகத்துக்கு வரும். 'புத்தியுள்ள மனிதனெல்லாம் வெற்றி காண்பதில்லை. வெற்றி பெற்ற மனிதனெல்லாம் புத்திசாலி இல்லை..!

ஐடியாவை மட்டும் வைத்து இருப்பவர்கள், புத்திசாலிகளாக இருக்கலாம். ஆனால், அவர்கள் வெற்றியாளர்களாக மாறி இருக்கிறார்களா என்று பார்த்தால், இல்லை என்பதே பதிலாக இருக்கும்.

அப்படியானால் பிசினஸில் வெற்றி பெற என்று நம்மிடம் இருக்க வேண்டும்?

எந்த ஐடியாவாக இருந்தாலும் அதை சரியாக செயல்படுத்தத் தெரிந்திருக்க வேண்டும். படிக்காத பலரும் பல பிசினஸ் நிறுவனங்களை அற்புதமாக நடத்தி வருகிறார்கள். அதற்குக் காரணம், அவர்கள் அந்த ஐடியாவை சரியாக செயல்படுத்தியது தான்.

ஃபேஸ்புக் என்பது புதிய ஐடியாவே அல்ல. ஆனால், அதை சரியாக செயல்படுத்தியது தான் மார்க் ஜகர்பெர்க்கின் வெற்றி. அஸிம் பிரேம்ஜி படித்தது எலெக்ட்ரிக்கல் என்ஜினீயரிங் தான். அவரால் விப்ரோ என்கிற மிகப்பெரிய ஐடி கம்பெனி உருவாக்க முடிந்ததற்குக் காரணம், அவரிடம் இருந்த செயலாக்கம் தான்.

செயலாக்கம் நன்கு செய்யத் தெரிந்தவர்கள், படிக்காதவர்களாக இருந்தாலும், படித்த பல மேதாவிகளுக்கு வேலை தரக்கூடிய நபர்களாக மாறிவிடுகிறார்கள் என்பதற்கு இன்று நம் தமிழகத்தில் பல ஆயிரம் பேர் இருக்கிறார்கள். பிசினஸில் ஜெயிப்பதற்கு முக்கியமான தேவை, சரியான ஐடியாவை சரியாக செயல்படுத்துவது தான்.

நிழலை நிஜமாக்கும் கலை அத்தனை பேருக்கும் இருக்கிறதா என்று கேட்டால், இல்லை என்பதே என் பதில். சிலர், தான் செய்ய நினைக்கும் தொழிலைப் பற்றி அருமையாகப் பேசுவார்கள், ஆனால், அதை நடைமுறையில் செய்யும் போது எதை எதையோ செய்து சொதப்பிவிடுவார்கள். எனவே, புத்திசாலியாக இருப்பவர், நல்ல திறமைசாலியாக இருக்க வேண்டும் என்பதில்லை. அதாவது, நன்கு செயல்படுத்தும் திறமை கொண்டவராக இருக்க வேண்டும் என்பதில்லை. அதேபோல, நல்ல திறமைசாலி என்பவர் புத்திசாலியாக இருக்க வேண்டும் என்பதில்லை.

நாங்கள் ஷாம்பு தயாரிக்க தொடங்கிய போது, அது ஒரு புதிய பொருளே அல்ல. எங்களுக்குமுன் நூறு பேர் ஷாம்பு தயாரித்து விற்றுவந்தார்கள். ஆனால், சில விஷயங்களை செயல்படுத்திய விதம் தான் நூறாவது ஆளாக இருந்த என்னை இரண்டாவது ஆளாக முன்னேற்றியது. எனக்கு போட்டியாக இருந்த பலர் என்னைவிட நிச்சயமாக புத்திசாலிகள் என்பதில் சந்தேகமே இல்லை.

உதாரணமாக, 5 காலி சாஷேக்களை தந்து புதிய சாஷே ஷாம்பு இலவசமாக வாங்கிக் கொள்ளுங்கள் என்ற போது, மக்களிடம் வரவேற்பு கிடைத்தது. நறுமணப் புரட்சி என்று விளம்பரம் செய்த போது, மக்கள் அதை நிஜமாகவே உணர்ந்தார்கள், ஷாம்பு போட்டுக் குளிப்பதினால் என்ன நன்மை என்பதை மக்களுக்குக் குளிப்பாட்டிக் காட்டி புரிய வைத்தபோது படிக்காதவர்களும் அதைப் பயன்படுத்தத் தொடங்கினார்கள்.

எல்லாவற்றுக்கும் மேலாக, ஒவ்வொரு கிராமத்திலும் எங்கள் தயாரிப்பு கிடைக்கிற மாதிரி எங்கள் விநியோகத்தை மாற்றினோம். இந்த செயலாக்கம்தான் எங்களை இந்தத் துறையில் புகழ் பெற்ற நிறுவனமாக மாற்றியது.

சில பெரிய நிறுவனங்கள் காலவோட்டத்துக்குத் தேவையான மாற்றங்களைச் செயல்படுத்தாமல் போவதினாலேயே மறைந்து போகின்றன. உதாரணமாக, நோக்கியா நிறுவனம் செல்போன் தயாரிப்பில் தன்னிகரில்லாமல் விளங்கியது. சில ஆண்டுகளுக்கு முன்பு வரை, 2 சிம், ஆண்ட்ராய்டு தொழில்நுட்பம் வந்த பிறகும், கீபோர்டை மட்டுமே வைத்திருந்தது. காலத்துக்கேற்ற மாற்றம் என்பதைக் கொண்டு வராமல் போனதால், மைக்ரோமேக்ஸ் போன்ற சமீபத்தில் தோன்றிய நிறுவனங்களின் பின்னால் போய் நிற்கிறது நோக்கியா.

ஆக, நமக்கிருக்கும் தொழில் ஐடியாவை சரியாக செயல்படுத்தி ஒருமுறை மார்க்கெட் ஷேரை பிடித்து விட்டால் மட்டும் போதாது; காலமாற்றத்துக் கேற்ப தொடர்ந்து உங்கள் தயாரிப்பில் நீங்கள் மாற்றங்களை செயல்படுத்திக் கொண்டே இருக்க வேண்டும். அப்படி செய்யாவிட்டால், அழிந்து போன நிறுவனங்களின் பட்டியலில் நீங்கள் சேர்ந்துவிடுவீர்கள்.

ஐடியாக்களை செயல்படுத்தும் போது பலவிதமான கஷ்டங்கள் வரும். அந்த கஷ்டங்களை எல்லாம் தாண்டி வந்தால் வெற்றி கிடைக்கும். நாங்களும் எங்கள் ஐடியாக்களை செயல்படுத்தும் போது பலவிதமான கஷ்டங்களை எதிர்கொண்டோம். நிறைய தோல்விகள்.. அதிலிருந்து கற்ற பாடங்கள்.. புதிய முயற்சிகள் என்று எங்கள் வாழ்க்கை போய்க் கொண்டிருந்த போது, திடீரென ஒரு புத்தகம் ஒன்று எனக்கு கிடைத்தது. அந்தப் புத்தகம் கிடைத்தபிறகு. நாங்கள் செயல்படும் விதமே அடியோடு மாறிவிட்டது. இன்றைக்கு எங்கள் நிறுவனமே அந்தப் புத்தகம் சொன்னபடி தான் நடக்கிறது.

# இதழாசிரியர்

ஒரு மனுஷன் ஒரு நாள் ல ஒரு தடவை ஒருத்தருக்காச்சும் நன்றி சொன்னா அவங்களுக்கு இந்த இயற்கை ஏதோ ஒரு வகைல நன்றி சொல்லுமாம். Opening Message நல்லா இருக்குல்ல.... ஹி ஹி ஹி...

அதுனால opening வணக்கம் னு சொல்லாம நன்றி ஓட ஆரம்பிக்கிறேன். அனைவருக்கும் நன்றி...


ஓர் இதழ் வெளியாகுது அப்டினா, அதுக்கு பின்னாடி பல பேரோட முயற்சியும், வழிகாட்டுதலும், உழைப்பும் இருக்கு. இந்த இதழ் படிக்குற உங்களுக்கு ஏதாவது ஒரு நல்ல விஷயத்த குடுக்கணும் னு ISRO விஞ்ஞானி மாதிரி பல ஆராய்ச்சிகள் பண்ணி, பல பேர்கிட்ட opinion வாங்கி அதுக்கப்புறமா, பல trials பாத்து வெளியிடுறோம். எப்படி ராக்கெட் சொய்ய்ய்ய் னு மேல போறப்போ விஞ்ஞானிக்கு சந்தோசம் வருதோ, அந்த மாறி இந்த இதழ் படிச்சு உங்க கருத்துகளை பகிர்ந்தீங்கன்னா எனக்கும் சந்தோசம் கிடைக்கும்.

நம்ம அமைப்புல நடக்குற விஷயங்கள உங்களுக்கு ‘மீண்டும் நினைவுகூரும் வகையில்‘ கொண்டு சேர்க்குற ஒரு மிகப்பெரிய முயற்சி தான் இந்த இதழ். நம்ம அமைப்புக்காக செயல்படுற ஒவ்வொரு தோழமைகளையும் இந்த இதழ் மூலமா நன்றி பாராட்டுறோம். நம்ம நிகழ்முறைக் கூட்டத்துக்கு கண்டிப்பா நீங்க, உங்க குடும்பத்தோட வாங்க கலந்துக்கோங்க... கல்யாணத்துக்கு பத்திரிகை வெச்சு விசேஷத்துக்கு போகலினா, மணமக்கள் வருத்தப்படுவாங்கலையா, அதுமட்டும் இல்லாம விசேஷத்துல நம்ம சுற்றத்த உறவுகள பாக்கமுடியும். busy life ல ஒரு get together மாதிரி தான் இந்த நிகழ்வு... அதேமாதிரி இந்த நிகழ்முறைக் கூட்டத்துக்கு உங்களுக்கு இந்த இதழையே ஓர் அழைப்பா கருதி குடும்பத்தோட வரணும் னு அன்பா கேட்டுக்குறேன்.

வாங்க பழகுவோம்... இந்த இதழ் படிச்சவுடனே உங்க குருகிச்செய்திக்காக காத்துகிட்டு இருப்பேன். ***9600201120*** நம்பர் உங்க ட்ரிங் ட்ரிங் & டிங் டிங் காக காத்துகிட்டு இருக்கும்.

நானும் நல்லா இருக்கேன், நீங்களும் நல்லா இருங்க, நாம எல்லோருமே நல்லா இருப்போம், ஆரோக்கியமா இருப்போம், சந்தோசமா இருப்போம்... வணக்கம்.





*அரிமா* **J. ஆனந்த் பிரபு**
*இதழாசிரியர்*

THE Ceedee's GROUP

**Manufacturers of PP WOVEN FABRIC/SACKS for :**

- Cattle feed
- Poultry feed
- Feed Additives
- Tea
- Coffee
- Sugar
- Rice
- Fertilizers
- Cement
- Tile fixes
- PVC / UPVC Pipes
- Foam Mattresses
- Textiles
- Sago
- Oil Cakes

# Venbro Polymers

**ERODE 638 004**

**Contact: 9443321809**

**Mail: venbro@ceedees.com**

**kn@ceedees.com**

## OUR PRODUCTS



















# THULASI READYMIX

கனவு மெய்ப்பட வேண்டும்...

Erode: 95 85 84 00 00
Salem: 97 86 35 00 00




# RR THULASI BUILDERS

Printed By : SPY Printers, Erode. 98427 29669